ISSN:2582-9599



# மணிமேகலைக் காப்பியம் உணர்த்தும் பண்பாட்டுக் கூறுகள்

**மு.ஆகாஷ்**
**இளங்கலைத்தமிழ், காமராஜ் கல்லூரி**
**தூத்துக்குடி**

**39**

**ஆய்வு சுருக்கம்:-**

இரட்டைக்காப்பியங்களாக, சிலப்பதிகாரமும், மணிமேகலையும் கருதப்படுகிறது. சிலப்பதிகாரம் கதையின் தொடர்ச்சியை மணிமேகலை எனும் காப்பியமாக சீத்தலைச் சாத்தனார் இயற்றியுள்ளார். வாழ்வியல் அறக்கருத்துக்களையும், சமய சிந்தனைகளையும் எடுத்து இயம்பும் காப்பியமாக மணிமேகலை அமைந்துள்ளது. மணிமேகலை காப்பியத்தில் அறியலாகும் வாழ்வியல் பண்பாட்டுக் கூறுகள் குறித்து இவ்வாய்வுக் கட்டுரை இயம்புகிறது.

**முன்னுரை:-**

மணிமேகலை என்பது தமிழில் உள்ள பழைய பெருங்காப்பியங்கள் ஐந்தனுள் ஒன்று. கண்ணகி கோவலன் வரலாறு கூறும் மற்றொரு பெருங்காப்பியமாகிய சிலப்பதிகாரம் என்னும் அரிய நூலோடு தொடர்புடையது. கோவலனுக்கும், மாதவிக்கும் பிறந்த மணிமேகலையின் வரலாற்றினை பொருள்கள் நான்கினுள் அறம்.பொருள், இன்பம், வீடு என நூல்கிளில் நுவலுதற்குரிய பொருள்கள் நான்கினுள் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றும் சிலப்பதிகாரத்திலும், வீடு என்பது மணிமேகலையிலும் கூறப்பட்டுள்ளன.

உயிர்களிடமும் அன்பு பாராட்ட வேண்டும் என்பதையும் விளக்குகிறது. எல்லாவற்றுக்கும் மேலாகச் சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக மாற்றப்பட்டு அங்குள்ளோர்க்கு அமுதசுரபி கொண்டு மணிமேகலை அவர்களின் பசிப்பிணியை நீக்குவதும் காப்பியத்தின் தனிச்சிறப்பாகும். பல்வேறு சமயச் சிந்தனைகளை எடுத்துக் கூறுகிறது.

**பசிப்பிணி நீக்கல்:-**

மணிமேகலைக் காப்பியம்,

**“பசியும் பிணியும் பகையும் நீங்கி வசியும் வளனும் சுரக்க”**

**(மணிமேகலை பதிகம் 116,117)**

என வாழ்த்தித் தொடங்குகின்றது. தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் சகத்தினை அழித்திடுவோம் என்றார் பாரதி. அதுபொல பசிப்பிணி போக்கும் அறம் செய்வதை முதன்மையாகக் கொண்டுள்ளது.

**“மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம் உண்டிக் கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே”**

**(பாத்திரம் பெற்ற காதை 95,96)**

என்பதனையே பாவிகமாகக் கொண்டு காவியம் பாடினார் சாத்தனார். அவர் பசியின் கொடுமையைப் பின்வருமாறு விளக்குவார்.

**“குடிப்பிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்;லும் பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம் நாண**

**அணிகளையும் மாண்எழில் சிதைக்கும் பூண்முலை மாதரொடு புறஙடகடை நிறுத்தும் பசிப்பிணி என்னும் பாவி”**

**(பாத்திரம் பெற்ற காதை 76,80)**

இக்கொடுமையை ஒழித்தலே உலகிலுள்ள அறத்தில் எல்லாம் சிறந்தது. என்;பதனை,

**“ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலை பகர்வோர் ஆற்றா மாக்கள் அரும்பசிகளைவோர் மேற்றெ உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை”**

**(பாத்திரம் பெற்ற காதை (92,94)**

என்று வற்புறுத்துகின்றார்.

**மணிமேகலை, பண்பாட்டு நெறிகள்**

ஆபுத்திரன் என்பவன் வேள்வியில் பலி கொடுப்பதற்கெனப் பார்ப்பனர் கட்டி வைத்திருந்த பசுவை அவிழ்த்து விடுகிறான். அதைக் கண்ட பார்ப்பனர்கள் அவன் பிறவி இழிந்தது என்று தூற்றுகின்றனர். அவன் அமைதியாக உங்கள் முனிவர்கள், பசு வயிற்றிலும், மான் வயிற்றிலும், நரி வயிற்றிலும் பிறந்தவர்களாயிற்றே என்று மறுமொழி கூறுகிறான். ஆபுத்திரன் ஊரைவிட்டு விரட்டப்படுகிறான். ஆபுத்திரகனுக்குத் தெய்வம் அமுதசுரபியை அளிக்கிறது. அமுதசுரபி கொண்டு ஆபுத்திரன் கொண்டு ஆபுத்திரன் அறம் செய்கிறான்.

பிறர் பசி தீர்க்க அதனைப் பயன்படுத்த முடியாத நிலையில் கோமுகி என்ற பொய்கையிலே அதனை விட்டெறிந்து விட்டு உண்ணா நோன்பிருந்து உயிர் விடுகிறான். அப்பாத்திரமே பிறகு மணிமேகலையின் கையை அடைகிறது. மணிமேகலை சிறைச்சாலையை அறச்சாலை ஆக்குகின்றாள். பெண்களின் கற்பு, தவசிகளின் நோன்பு ஆகியவற்றை அரசன் பாதுகாக்காவிட்டால் அவை இடர்ப்படும் என இந்நூல் கூறுகின்றது.

**சீர்திருத்தக் கொள்கை:-**

பரத்தை ஒழிப்பு என்ற சமுதாயச் சீர்திருத்தத்தை இக்காவியத்தில் வலியுறுத்தியுள்ளார் சாத்தனார். இந்நூலில் வரும் சித்திராபதி மணிமேகலையின் பாட்டி, மாதவியின் தாய் அவள் பரத்தை வாழ்க்கை நடத்தியவள். பலரை இன்புறுத்துவதே நம் கடமை என்று கொள்பவள். கோவலன் இறந்தபின் மாதவி இந்திர விழா நாளில் நடனம் ஆடாததைச் சித்திராபதி விரும்பவில்லை. மேலும் தன் பேத்தி குமரிப் பருவத்திலுள்ள மணிமேகலை ஒதுங்கியிருப்பது சரியல்ல என்று கருதினாள். மணிமேகலையும், மாதவியும் வாராத் தணியா துன்பம் மேல்விழ சித்திராபதி தன் மகளைத் தோழி வயந்த மாலையை அனுப்பி அழைத்துவரச் செய்கின்றாள். வயந்த மாலை ஏமாற்றத்துடன் திரும்பினாள். சித்திராபதியோ குலவொழுக்கம் போயிற்றே என்று துடிக்கிறாள். பரத்தையரின் குலவொழுக்கம் பற்றி சித்திராபதி கூறுவதைக் காணலாம்.

**“பத்தினிப் பெண்டிர் அல்லேம் பலர்தம் கைத்தூண் வாழ்க்கை கடவியமன்றே யாழினம் போலும் இயல்பினம், பூத்துறக்கும் வண்டுபோல்குவம்”**

**(1979,80)**

சாத்தனார் பரத்தை குலம் ஒழிய வேண்டும். பரத்தையர் இல்லறத்தோராக முன்னேற வேண்டும் என்ற சீர்திருத்தவாதி.

**சமயநீதி:-**

சமயம் இல்லையேல் காப்பியம் இல்லை என்பா. மணிமேகலையில் வரும் கடவுளர் பாத்திரங்களும், அறவன அடிகளும் சமயநீதி உணர்த்தவே வருகின்றனர். மணிமேகலையில் வரும் அனைத்துப் பாத்திரங்களின் செயல்களுக்கும் காரணம் வினைப்பயனே என்று தெளிவுப்படுத்தப்படுகிறது. அதோடு இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை ஆகிய நிலையாமைக் கோட்பாடுகளை வற்புறுத்துவதில் இவ்விரு சமயங்களும் தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்வன.

**"இளமையும் நில்லா யாக்கையும் நில்லா வளவியவான் பெரு செல்வமும் நில்லா புத்தேள் உலகம் புதல்வரும் தாரார் மிக்க அறமே விழுத்துணையாவது"**

**(சிறைசெய் காதை 135,138)**

என உணர்த்தும். வீடுபேறு பெறுவது வாழ்வின் நோக்கம் என்பது இவற்றின் முடிந்த முடிவு. இதற்கு அடிப்படை காமத்தைக் கடத்தல் வேண்டும் என்பது. இதனால் தான் மணிமேகலையின் காம உணர்வுகளை ஆங்காங்கே எடுத்துக்காட்டி, அவை நல் அறச்சிந்தனையால் முற்றிலும் கடியப்படுவதைக் காப்பியம் காட்டுகிறது. புறப்பு இறப்பு என்பது உலக இயற்கை, இதற்காகக் கவலைப்படுவது பேதைமை என்பதனை அறவன அடிகள் வாயிலாக எடுத்துரைக்கிறார். உதயகுமரன் இறந்ததற்காகப் புலம்பும் மணிமேகலை இதே கருத்தையே முன் வைக்கிறாள்.

**"பிறந்தோர் இறத்தலும் இறந்தோர் பிறத்தலும் அறந்தரு சால்பும் மறம்தரு துன்பமும்"**

**(கந்திற்பாவை உரைத்த காதை 19,20)**

என்று உணர்த்தவுமே காய சண்டிகை வடிவு கொண்டேன் என்கிறாள். மாதவி துறவறம் மேற்கொள அறவண அடிகளைத் தொழுகிறாள். அவளுக்கு சமயநீதி உணர்த்தும் அடிகள்,

**"பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம் பிறவார் உறுவது பெரும் பேரின்பம் பற்றின் வருவது முன்னது, பின்னது அற்றோர் உறுவது, அறிக என்று அருளி ஐவகைச் சீலத்து அமைதியும் காட்டி உய்வகை இவை கொள்"**

**(ஊர் அலர் உரைத்த காதை 64,69)**

உணர்த்துகின்றன. ஆடவரன்றி மகளிரும் துறவயூண்டு நம் ஒழுக்கத்தை மேற்கொள்ளுதற்கும் உரியர் என்பது புத்தக் கொள்கையாகும்.

**மனிதநேயம்:-**

மணிமேகலையின் மையக் கருத்தே உண்டிக் கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே **"மணிமேகலையில் எங்கும் அன்பு எங்கும் அறம்"** என்று திரு.வி.க. கூறுவார். மணிமேகலையின் தோழி சுதமதி சண்பை நகரத்தில் கௌசிகன் என்ற இறப்பிறப்பாளனுக்கு ஒரே மகளாகப் பிறந்தவர். தனியாக மலர் வனத்தில் பூ கொய்து கொண்டிருந்தபோது மாருதவேகன் என்ற விஞ்சயன் அவளைத்

தன்வயப்படுத்திக் கொண்டான். பின் புகார் நகரில் விட்டுச் சென்றான். அவள் தந்தை சுதமதியைக் கண்டார். இரந்துண்டு வாழ்ந்தான். பசுவொன்று அவனைப் சாய்த்துவிட்டது சமணர்கள் புறக்கணித்தனர். சுங்க தருமன் அன்பான மொழிகளைச் சொல்லி புத்த முனிவர்கள் தங்கியுள்ள இடத்தைக் காண்பித்தார். இருவரும் அங்கிருந்தபோது தகப்பனார் காலமானர். சுங்கதர்மனின் அன்பு அளவிட முடியாதது. புத்தரை சுதமதி தனக்கென வாழ பிறர்க்குரியாளன் என வர்ணிக்கிறான். நம் தலைப்புக்கு இது மிக மிகப் பொருத்தமாகும்.

**நிறைவுரை:-**

தமிழ்பண்பாட்டுக் கருவூலமாக மணிமேகலை விளங்குகின்றது. மணிமேகலைக் காப்பியம் உணர்த்தும் சமூக நீதிக்கருத்துக்கள் பல அவற்றுள் முதன்மையானது பசிப்பிணி போக்குதலே ஆகும். அதோடு வேள்விக்காகப் பசுக்கொலை செய்வது பாவம் என்னும் கருத்தை ஆபுத்திரன் கதை உணர்த்துகிறது. நிலையாமை, மறுபிறப்பு, வறுமை ஒழிப்பு உள்ளிட்ட பல கருத்துக்களை எடுத்துக்கூறும் அற்புத இலக்கியமாக மணிமேகலை திகழ்கிறது.

**துணைநூற்பட்டியல்**

மணிமேகலை மூலமும் உரையும்
கௌரா புத்தக மையம்
காப்பியங்களில் தமிழர் வாழ்வியல்
எம் .எஸ். லக்ஷ்மி
உமா பதிப்பகம்
மணிமேகலை  உணர்த்தும் வாழ்வியல் நெறிப்பயணம்
இரவி  - வலைதளக்கட்டுரை